## சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – சத்துணவு அமைப்பாளர்/ அங்கன்வாடி பணியாளர்கள் அருகில் உள்ள பொறுப்பாளர் இல்லாத மையத்தில் கூடுதல் பொறுப்பேற்று பணியாற்றும் போது நாளொன்றுக்கு வழங்கப்படும் கூடுதல் பணிப்படி தொகை இரண்டு ரூபாயை பத்து ரூபாயாக உயர்த்தி வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி2) துறை,

அரசு ஆணை (நிலை) எண். 3

நாள். 04 –01–2010.
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 20 ம் நாள்

படிக்கப்பட்டது:-

1) அரசு ஆணை (பல்வகை) எண். 926.பொதுத் (முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு) துறை, நாள். 30–04–1986.
2) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21–11–09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

-----

ஆணை:-

சத்துணவு மையங்களை கவனிப்பதற்கு ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு அமைப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சத்துணவு மைய அமைப்பாளர்கள் பணி விலகியதைத் தொடர்ந்தோ அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டதை அடுத்தோ, ஏற்பட்ட காலி இடத்தை அருகிலுள்ள வேறு மையத்தின் அமைப்பாளர்கள் பொறுப்பேற்று நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு அமைப்பாளர் தனது மையபொறுப்புகளைச் செய்து முடித்து, மற்றொரு மையத்தின் பொறுப்புகளை ஏற்று கூடுதல் பணி செய்யும் போது கூடுதல் பணி செய்த நாட்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.2/– (ரூபாய் இரண்டு மட்டும்) வழங்கவும், மேலும் மேற்கண்ட விதி அவர்கள் தற்காலிக விடுப்பு எடுக்கும் நாட்களுக்கு பொருந்தாது எனவும், ஒரு அமைப்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட மையங்களில் கூடுதல் பொறுப்பை ஒரே சமயத்தில் ஏற்றாலும் அவருக்கு ஒரு நாளைக்கு ரூ 2/– மட்டுமே கூடுதலாக வழங்கப்படும் எனவும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2) தமிழ்நாடு சத்துணவு, குழந்தைகள் நல பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய ஒருங்கிணைந்த நன்றி அறிவிப்பு பாராட்டு விழாவில் மாண்புமிகு முலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

"சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி பணியாளர்கள் அருகில் உள்ள பொறுப்பாளர் இல்லாத மையத்தில் கூடுதல் பொறுப்பேற்று பணியாற்றும் போது ரூ.2 வீதம் கூடுதல் பணிப்படியாக வழங்கப்பட்ட தொகையை 10 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்"

3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி பணியாளர்கள் அருகில் உள்ள பொறுப்பாளர் இல்லாத மையத்தில் கூடுதல் பொறுப்பேற்று பணியாற்றும் போது நாளொன்றுக்கு 2 ரூபாய் வீதம் கூடுதல் பணிப்படியாக வழங்கப்பட்டு வரும் தொகையை 10 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

4) மேற்காணும் செலவினம் அவர்களுக்கு சம்பளம் பெற்று வழங்கும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

5) இத்திட்டம், இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

6) இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் அதன் அ.சா.கு. எண்.320/JS (APA)/09 நாள். 04–01–2010 ன்படி வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

பா.இராம மோகனராவ்
அரசுச் செயலாளர் .

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,
சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர்,
சென்னை–2
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை–9
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7பிரிவு) துறை,
சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.